**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2017**

**வழக்கு சாட்சி: PW.11**

**தேதி: 16.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | வள்ளியப்பன் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | அழகர் | **தொழில்:** | சலவை தொழில் |
| **கிராமம்:** | தெற்கு தாளம்பட்டி | **சமயம்:** | இந்து |
| **தாலுகா:** | திருமயம் | **வயது:** | 64/2023 |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேலேக் கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் சலவை தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2015ம் வருடம் தேதி ஞாபகம் இல்லை. அன்று காலை 08.00 மணியளவில் நமணசமுத்திரம் அருகே நான் எனது கடையில் அயன் செய்து கொண்டிருந்தேன். அப்போது ஆட்கள் போய் வர இருந்தார்கள். நான் அவர்களிடம் என்ன ஏது என்று விசாரித்தேன். அப்போது அவர்கள் உன் கடைக்கு அயன் செய்ய வரும் கிருஷ்ண மூர்த்தி என்பவர் அடிபட்டு கிடப்பதாக கூறினார்கள். நான் ரயில்வே தண்டவாளத்தில் சென்று பார்த்தேன். அங்கு கிருஷ்ணமூர்த்தியின் பிரேதம் கிடந்தது. 2 மாதங்கள் கழித்து தெரிந்தவர்கள் கிருஷ்ணமூர்த்திக்கும் டிரைவருக்கும் பிரச்சினை என்று சொன்னார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் 22.05.2015ம் தேதி கிருஷ்ண மூர்த்தியின் தாயார் சிங்கம்மாள் என்பவர் தனது மகன் கிருஷ்ணமூர்த்தியின் இறப்பானது ரயிலில் அடிபட்டு இறக்கவில்லை என்றும் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து ரயில் தண்டவாளத்தில் போட்டுள்ளதாகவும் சிங்கம்மாளின்

பேத்திகளான அபிராமி என்பவர் கூறிய தகவலில் பேரில் புதுக்கோட்டை எச்பி கேஸ் சிலிண்டர் கம்பெனியின் லாரி டிரைவராக இருக்கும் 1வது எதிரி வீரசோழனும் அவனது  கூட்டாளியான 2வது எதிரியான ராஜா என்ற பாரதிராஜாவும் இறந்து போன கிருஷ்ணமூர்த்தியின் மனைவியான 3வது எதிரி வசந்தியும் கிருஷ்ண மூர்த்தியின் மூத்த மகளான அன்புக்கரசியும் கூட்டாக சேர்ந்து இறந்த கிருஷ்ண மூர்த்தியை அவரது வீட்டில் 25.02.2015ம் தேதி இரவு அடித்து கொலை செய்து கிருஷ்ணமூர்த்தியை ரயில் தண்டவாளத்தில் போட்டுவிட்டதாக கேள்விப்பட்டு போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் இல்லை. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும் கிருஷ்ணமூர்த்தியின் தாயார் சிங்கம்மாள் கொடுத்த புகாரின் பேரில் ரயில்வே போலீசார் கொலை வழக்காக விசாரித்து வருவதாக தெரிந்துக்கொண்டதாகவும் வழக்கு சம்பவம் சம்பந்தமாக மறு வாக்குமூலம் கொடுத்ததாகவும் சொன்னேனா என்றால் எனக்கு விபத்திற்கு பின்னீடு ஞாபக மறதி ஏற்பட்டுவிட்டதால் அது சம்பந்தமாக தெரியவில்லை. எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கில் ஏற்கனவே நான் கொடுத்த மறு வாக்குமூலத்தை மாற்றி தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1, 2 எதிரிகளை நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. கேள்விப்பட்டுள்ளேன். 3வது பெண் எதிரியை மட்டும் தெரியும். 3வது எதிரியின் ஊருக்கும் எனது ஊருக்கும் இடையே 3 கி.மீ தூரம் இருக்கும். 3வது எதிரியின் கணவரின் ரயிலில் அடிபட்டு கிடந்ததை 10 அடி தூரத்தில் நின்று பார்த்தேன். மனைவி, மக்கள் அழுதுக் கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்க்கும் போது போலீசார் அங்கில்லை. நான் மீண்டும் அரை மணிநேரம்

கழித்து ரயில் தண்டவாளத்தின் அருகில் சென்று பார்த்தேன். அப்போது போலீசார் அங்கு இருந்தார்கள். அப்போது போலீசாரிடம் 3வது எதிரியும் அவரது மக்களும் பேசிக் கொண்டிருந்தார்கள். 3வது எதிரி எங்கள் ஊரில் மளிகை கடையும் டீக்கடையும் வைத்திருந்தார். அதனால் தான் 3வது எதிரியை தெரியுமா என்றால் துணிமணிகள் அயன் செய்ய வருவார்கள். அதனால் அவரை எனக்கு தெரியும்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் ஏற்றுக் கொள்கிறார்கள்.**

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2017**

**வழக்கு சாட்சி: PW.12**

**தேதி: 16.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | ஆறுமுகம் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | ஆண்டியப்பன் | **தொழில்:** | ஒட்டுநர் |
| **கிராமம்:** | விராச்சிலை | **சமயம்:** | இந்து |
| **தாலுகா:** | திருமயம் | **வயது:** | 64/2023 |

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேலேக் கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து ஓட்டுநர் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3வது எதிரி எனது கொழுந்தியாள் என்பதால் அவரை மட்டும் தெரியும். மற்றவர்களை தெரியாது. கடந்த 26.02.2015ல் வடக்கிப்பட்டியிலிருந்து அம்பலம் எனக்கு போன் செய்தார். எனது சகலை ரயில் தண்டவாளத்தில் அடிபட்டு இறந்து கிடப்பதாக தகவல் சொன்னார். நான் ஊரிலிருந்து வந்து ரயில்வே தண்டவாளத்திற்கு சென்று பார்த்தேன். அங்கு கிருஷண்மூர்த்தி இறந்த நிலையில் ரயில்வே தண்டவாளத்தில் கிடந்தார். அதன் பின்னீடு போலீசார் வந்தார்கள், விசாரித்தார்கள். அதன் பின்னீடு 3 மாதங்கள் கழித்து கிருஷ்ணமூர்த்தியின் தாயார் சிங்கம்மாள் என்பவர் தனது மகன் ரயிலில் அடிபட்டு இறக்கவில்லை என்றும் கொலை செய்யப்பட்டார் என்றும் மனு கொடுத்ததாக கேள்விப்பட்டேன். என்னை நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் போலீசார் விசாரணை செய்தார்கள். சிங்கம்மாள் கொடுத்த மனுவில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. என்னை காவல் ஆய்வாளர் விசாரித்தார். நான் வாக்குமூலம் கொடுத்தேன். காவலர் என்னை விசாரிக்கும் போது நான் வாக்குமூலமாக சொன்ன சங்கதிகள் எனக்கு ஞாபகம் இல்லை.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது கிருஷ்ணமூர்த்தியின் தாயார் கொடுத்த மனுவில் கிருஷ்ணமூர்த்தி ரயில்வே தண்டவாளத்தில் அடிபட்டு இறக்கவில்லை என்றும் எதிரிகள் மூவர் மற்றும் கிருஷ்ணமூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி ஆகியோர் சேர்ந்து 25.02.2015ம் தேதி இரவு கிருஷ்ணமூர்த்தியை வீட்டில் வைத்து அடித்து கொன்றுவிட்டு ரயில்வே தண்டவாளத்தில் போய் போட்டுவிட்டதாக சொல்லியுள்ள விபரங்களை நான் தெரிந்து போலீசாரிடம் கூறினேனா என்றால் போலீசார் மூலமாக தெரிந்துக் கொண்டேன். அதனால் இந்த வழக்கை கொலை வழக்காக மாற்றி போலீசார் விசாரித்தார் என்ற விபரத்தினை நான் தெரிந்துக் கொண்டேன். எதிரிகள் மூவரும் மற்றும் கிருஷ்ண மூர்த்தியின் மூத்த மகள் அன்புக்கரசி ஆகியோர் சேர்ந்து கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்து ரயில்வே தண்டவாளத்தில் கொண்டு போய் போட்ட விபரத்தினை நான் கேள்விபட்டு போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றும் தற்போது 3வது எதிரி எனது உறவினர் என்பதால் வழக்கிலிருந்து அவரை காப்பாற்றுவதற்காக மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3வது எதிரி வசந்தியை கைது செய்து நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்துவதற்காக உறவினர் என்ற முறையில் என்னை வரவழைத்து எதற்காக கைது செய்து நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்துகிறோம் என்ற விபரத்தினை காவல் துறையினர் சொல்லி என்னிடம் கைது குறிப்பாணையில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3வது எதிரியை கைது செய்தவுடன் கைது குறிப்பாணையில் நான் கையெழுத்து செய்து விட்டு 3வது எதிரி அணிந்திருந்த அணிகலன்களை நான் தான் பெற்று சென்றேன் என்றால் சரிதான்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

என்னை நமணசமுத்திரம் போலீசார் மட்டும் தான் ஒரு முறை விசாரித்தார்கள் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி இறந்த சமயத்தில் என்னை நமணசமுத்திரம் போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. 22.05.2015ம் தேதி அன்று 3வது எதிரியை கைது செய்து அழைத்து செல்லும் போது நமணசமுத்திரம் போலீசார் என்னை விசாரித்தார்கள். 3வது எதிரி எனது மனைவியின் உடன் பிறந்த இளைய சகோதரி ஆவார். என்னுடைய வீடும் 3வது எதிரியின் வீடும் 10லிருந்து 12 கி.மீ

தூரத்தில் உள்ளது. 3வது எதிரியின் பிள்ளைகள் என்னிடம் பேசுவார்களா என்றால் 10, 12 வருடங்களாக தொடர்பில்லை. கிருஷ்ணமூர்த்தி இறந்தவுடன் தகவல் சொன்னார்கள். நான் சென்றேன். கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகள் பெரியப்பா என்ற முறையில் 10, 15 நாட்கள் மட்டும் பேசினார்கள். முறைகள் செய்யும் வரை பேசினார்கள். பின்னீடு தொடர்பில்லை. அதன் பின்னீடு எனக்கு 3வது எதிரியின் குடும்பத்தோடு தொடர்பில்லை. எனது மாமனார், மாமியாருக்கு நமணசமுத்திரத்தில் அதிகளவு சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். 3வது எதிரிக்கும் எனது மனைவிக்கும் சிவில் வழக்கு நீதிமன்றத்தில் நடந்து பேச்சுவார்தையில் முடித்துக் கொண்டார்கள். எனக்கும் இந்த 3வது எதிரியின் குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமாக நீண்ட நாட்கள் பிரச்சினை இருந்து வந்தது என்றும் வழக்கிற்காக சிவில் வழக்கு பேச்சுவார்த்தையில் முடித்துக் கொண்டோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பில் 2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்கிறார்.**

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2017**

**வழக்கு சாட்சி: PW.13**

**தேதி: 16.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | நடராஜன் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | அடைக்கப்பன் | **தொழில்:** | விவசாயம் |
| **கிராமம்:** | வடக்கிப்பட்டி | **சமயம்:** | இந்து |
| **தாலுகா:** | திருமயம் | **வயது:** | 57/2023 |

(எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை:**

நான் வடக்கிபட்டி கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3வது எதிரி வசந்தியை மட்டும் தெரியும். கடந்த 23.05.2015 காலையில் 06.00 மணியளவில் தேக்காட்டூர் ஊராட்சி மன்ற தலைவர் சுந்திரகோபாலன் வீட்டில் நான் இருந்தேன். அப்போது 3வது எதிரி வசந்தி அங்கு வந்து தலைவரிடம் விபரம் கூறினார். 3வது எதிரி 1, 2 எதிரிகள் மற்றும் தனது மூத்த மகளுடன் சேர்ந்து தனது கணவர் கிருஷ்ணமூர்த்தியை கொலை செய்த விபரத்தினை தலைவரிடம் கூறிக்கொண்டிருந்தார். நான் அதை நேரில் கேட்டேன். உடன் தலைவர் சுந்தரகோபாலன் கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டார். கிராம நிர்வாக அலுவலர் தேக்காட்டூர் பஞ்சாயத்திற்கு வந்துவிட்டார். 3வது எதிரி வசந்தி கொலை சம்பந்தமாக தன்னிடம் கூறிய விபரங்களை தலைவர், கிராம நிர்வாக அலுவலரிடம் தெரிவித்தார். சுமார் 08.30 மணியளவில் 09.00 மணிக்குள் நான், தலைவர் சுந்தரகோபாலன், கிராம நிர்வாக அலுவலர், 3வது எதிரி வசந்தி ஆகியோர் காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றோம். தலைவர் சுந்தரகோபாலன் காரைக்குடி ரயில்வே போலீசாரிடம் விபரங்கள் கூறி 3வது எதிரி வசந்தியை ஆஜர் செய்துவிட்டு நாங்கள் வந்துவிட்டோம். மறுநாள் நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் நடந்த விபரங்களை 3வது எதிரி வசந்தி வாக்குமூலமாக கூறியது. அப்போது நானும் தலைவர் சுந்தரகோபாலனும் கிராம நிர்வாக அலுவலரும் உடன் இருந்தோம். 3வது எதிரி வசந்தி வாக்குமூலம் கொடுத்த பின்னீடு 3வது எதிரி வசந்தியை போலீசார் கைது செய்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1,2 எதிரிகளை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் தலைவர் சுந்தரகோபாலன் வீட்டிற்கும் இடையே 1 - 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். தேக்காட்டூர் பஞ்சாயத்து அலுவலகம் நமணசமுத்திரம் கடை தெருவில் உள்ளது. நான் தலைவர் சுந்தரகோபாலனை எங்கள் ஊரில் சாலை அமைப்பது சம்பந்தாக பார்க்க சென்றேன். அப்போது என்னுடன் எங்கள் ஊர்காரர் சுப்பையா என்பவர் வந்திருந்தார். நான் சம்பவ சமயத்தில் விவசாய வேலை செய்து வந்தேன். நான் 3வது எதிரி வசந்தியை காரைக்குடி காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் சரிதான். சுந்தரகோபாலன் வீட்டில் நான் சுமார் அரை மணிநேரம் அங்கிருந்தேன். அங்கு கிராம நிர்வாக அலுவலர் வரும் போது மணி 06.30 இருக்கும். அவர் மட்டும் தான் வந்தார். கிராம நிர்வாக அலுவலர் புதுக்கோட்டையில் வசித்து வருகிறார். புதுக்கோட்டையிலிருந்து சுந்தரகோபாலன் ஊர் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். 3வது எதிரி சொன்னதை தலைவரும் கிராம நிர்வாக அலுவலரும் கேட்டுக் கொண்டார்கள். அங்கு வைத்து எழுதவில்லை. தலைவரும் விஏஓ-ம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் 3வது எதிரி சொன்னதை கைப்பட எழுதி அதில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து செய்த விபரம் எனக்கு தெரியாது. எழுதினார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது. சொன்னதை கேட்டேன். போலீசார் விசாரணையின் போது 3வது எதிரி தானும் மற்ற எதிரிகளும் சேர்ந்து கொலை செய்த விபரத்தினை கூறினார். நான் 3வது எதிரி தானும் மற்ற எதிரிகளும் சேர்ந்து கொலை செய்த விபரத்தினை போலீசாரிடம் சொன்னதாக தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்காக போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 3வது எதிரி காவல் நிலையத்தில் வாக்குமூலம் கொடுக்கும் போது 3வது எதிரியை கைது செய்ததற்கு பின்னால் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். 3வது எதிரியை போலீசார் காவல் நிலையத்தின் ஹாலில் வைத்து விசாரித்தார்கள். அப்போது எத்தனை போலீசார்கள் அங்கிருந்தார்கள் என்றால் 7, 8 பேர்கள் இருந்தார்கள். அப்போது அங்கு போலீசார் அல்லாமல் நானும், தலைவர் சுந்தரகோபாலனும், கிராம நிர்வாக அலுவலரும் இருந்தோம். வேறு யாரும் கிடையாது. 3வது எதிரி வசந்தி என் முன்பாகவோ தலைவர் சுந்தரகோபாலன் முன்பாகவோ எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காரைக்குடி ரயில்வே காவல்

நிலையத்திற்கு சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எங்கள் ஊரில் ஊர் தலைவர் தகுதியில் உள்ளேன். ஊரில் எந்தவொரு பிரச்சினை என்றாலும் காவல் துறையினர் என்னிடம் தகவல் கேட்பார்கள் என்றால் சரிதான். நான் ஊர் தலைவர் என்பதால்காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்கிறார்.**

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3வது எதிரி எனக்கு நன்கு அறிமுகமானவர் என்று சொன்னால் சரிதான். 3வது எதிரியின் வீட்டில் வழக்கு நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு முன்பு அவர்கள் குடும்ப பிரச்சினைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் 3வது எதிரி குடும்பப் பிரச்சினையில் சமரசம் செய்து வைத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி ரயில்வே தண்டவாளத்தில் அடிபட்டு இறந்து கிடந்த விபரம் எனக்கு தெரியும். அதன் பிறகு கிருஷ்ணமூர்த்தியின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த விபரம் உறவுக்காரர்கள் வந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரியும். 3வது எதிரியின் வீட்டிற்கு எதிரே காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காவல் நிலையத்தில் ரயில்வே விபத்து சம்பந்தமாக என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் சரிதான். காரைக்குடி காவல் நிலையத்திற்கு காவலர்கள் அழைத்ததால் நான் சென்றேனா என்றால் இல்லை. தலைவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அழைத்ததால் தான் காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றேன். எனது இரு சக்கர வாகனத்தில் காரைக்குடி ரயில்வே காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். அவரவர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றோம். எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும் நான் ஊர்தலைவர் என்ற முறையில் காவல் துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் எனது முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.